**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 583 of 2017

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : பேபி

Father's Name : க/பெ.ஜெயக்குமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of April** 2026.

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் சோமனூர் கரவலி மாதாப்பூரில் குடியிருந்து கொண்டு விவசாயம் பார்த்து வருகிறேன். கடந்த 10.06.2016 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்து புறப்பட்டு கட்டிட வேலை செய்து கொண்டிருந்தபோது, அண்ணா நகர் செல்ல வேண்டி பாதியில் என்னை இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் வழிமறித்து இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த நபர் இறங்கி வந்து நான் கழுத்தில் அணிந்திருந்த தங்க செயினை பறிக்க முயன்றார். நான் முடிந்தளவு முடிந்த அளவு போராடி பார்த்தேன். ஆனால் என்னால் தடுக்க இயலவில்லை. எனது செயினை பறித்துச் சென்று விட்டார்கள். மேற்படி எனது செயின் பறித்த நபரின் அங்க அடையாளங்கள் வெள்ளை ஷர்ட் அணிந்திருந்தார், உயரமாகவும் இருந்தார்.மேற்படி

இருசக்கர வாகனத்தில் பதிவு செய்யப்படாமல் புதிய வண்டியாக இருந்தது நம்பர் பிளேட்டில் for regn என இருந்தது. எனது செயின் எடை 4 ½ பவுன் ஆகும். அன்றைய தினமே நானும் எனது கணவரும் கருமத்தம்பட்டி காவல் நிலையம் சென்றுஎழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.இரண்டு மாதங்கள் கழித்து போலீசார் எங்களை அழைத்து எங்களுடைய செயின் திருடு போன நபர்களை செயினையும் பறிமுதல் செய்ததாக கூறினார்கள். நானும் காவல் நிலையம் சென்றேன்.

2. பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து நான் எனது செயினை பெற்றுக் கொண்டேன். புகைப்படத்தில் உள்ள செயின் என்னுடையது தான். புகைப்படம் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது . நான் சம்பவத்தின் பொழுதும் எனது செயின் படித்த நபரை சரியாக பார்க்க இயலவில்லை. தற்பொழுது என்னால் அடையாளம் காட்ட இயலுமா என ஞாபகம் இல்லை. ( எதிரிகள் இருவரும் இன்று ஆஜர் இல்லை.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவ இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் 500 மீட்டருக்குள் இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து நாங்கள் புதியதாக கட்டிக் கொண்டிருந்த இடத்திற்கு சுமார் 1 கி.மீ. இருக்கும். அன்றைய தினம் கட்டிட வேலை இரண்டு நபர்கள் செய்து கொண்டு இருந்தார்கள். பொதுவாக காலை 11:00 மணி முதல் 11.30 குள்ளாகவும் மதியம் 03.00 மணி முதல் 03:30 மணிக்குள்ளாகும் தான் டீ கொடுப்பது வழக்கம் என்றும் அன்றைய தினம் நான் 02.00 மணிக்கு வேலை செய்யும் மக்களுக்கு டீ கொண்டு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல என்னுடைய மாமா இறந்து 17 ஆம் நாள் என்பதால் துக்கம் விசாரிக்க வந்த உறவினர்களுக்கு பதில் கூறிவிட்டு பொறுமையாக தான் சென்றேன் . எனது செயினின் மாடல் குறித்து புகாரிலும் போலீசார் விசாரணையின் பொழுதும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி வாகனம் இந்த நிறுவனத்திற்கு சொந்தமானது என போலீசார் சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் முதல் முறை விசாரித்த பொழுது சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபர் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான், மீண்டும் விசாரித்த பொழுது 25 வயது இருக்கும் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒருவரை பார்த்தால் வயது அறுதியாக கூற இயலாது. நான்

அளித்த புகாரில் பின்னால் அமர்ந்திருந்த நபர் என்னுடைய செயின் பறித்துக்கொண்டு இன்னொருவர் வண்டியில் சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மொத்தம் நான்கு நபர்கள் இரண்டு வண்டிகளில் வந்தார்கள். முதலில் வந்தவர்கள் இரண்டாம் வண்டிக்கு சுமார் 10 அடிக்கு முன்னால் நின்று கொண்டு இருந்தார்கள். பின்னால் வந்த வாகனத்தில் இருந்த பின்னால் அமர்ந்து இருந்த நபர் என்னுடைய செயின் பறித்துக் கொண்டு சென்றார் .

3. நான் போலீசார் விசாரணையின் பொழுது மொத்தம் நான்கு நபர்கள் இரு வாகனங்களில் வந்தார்கள் என்றும் மேற்படி இரண்டு வாகனங்களில் முதலாவதாக பத்தடிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள் என்றும், பின்னால் இருந்த வாகனத்தில் இருந்த பின்னால் அமர்ந்து இருந்த நபர் என்னுடைய செயின் பறித்துச் சென்றார் என்று குறிப்பிட்டு குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஏனெனில் முன்னாள் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த நபர்கள் செயின் பறித்த நபருடன் வந்தவர்களா என எனக்கு அப்பொழுது தெரியாது. தற்பொழுது வரை மேற்படி நான்கு நபர்களின் முகம் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். புகார் அளிக்க நானும் எனது கணவரும் அன்றைய தினமே இரவு 08.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். அதற்கு முன்பாக சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு ஏதேனும் தகவல் சொன்னோமா என்றால், நாங்கள் எந்த தகவலும் கூறவில்லை. புகாரை காவல் நிலையத்தில் வைத்து தான் எனது கணவர் எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன்.

4. பொதுவாக சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் அதிக அளவில் போக்குவரத்து இருக்கும் என்றால், சம்பவ காலத்தில் அதிக அளவில் போக்குவரத்து இல்லை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் அருகே அரசு பள்ளி உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து கருமத்தம்பட்டி காவல் நிலையம் சுமார் ஐந்து கிலோ மீட்டர் இருக்கும். நான் சம்பவம் நடந்த பொழுது சத்தம் போட்டு அருகில் இருந்த தோட்டத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். அவர்களுடைய பெயர் நடராஜன், மனோஜ் குமார் ஆகும். தெற்கிலிருந்து வடக்காக சென்ற பொழுது சம்பவம் நடைபெற்றது. எதிரிகளும் தெற்கிலிருந்து வடக்காக தான் வந்தார்கள். பொதுவாக இருசக்கர வாகனத்தில் வந்து யாரேனும் செயின் பறித்தால் வாகனத்தின் பதிவு எண் பதட்டத்தில் பார்க்க இயலாது என்றால் சரிதான். ஆனால் நான் பார்த்தேன் மேற்படி வாகனம் பதிவு எண் இல்லாமல் for regn என இருந்தது. எதிரிகள் என்னுடைய செயின் பறித்துச் செல்லவில்லை என்றும் நான் வழக்கிற்காக எதிரிகள் பறித்துச் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**